## 4 மெட்ரோ ரயில் நிலையங்களில்

# மின்சார பைக்குகள் வாடகைக்கு அறிமுகம்

■ சென்னை

ஆலந்தூர், நந்தனம் உட்பட 4 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து பயணிகளின் வசதிக்காக மின்சார இருசக்கர வாகனங்கள் வாடகைக்கு அறிமுகம் செய்யப் பட்டுள்ளன. அடுத்த ஓர் ஆண்டில் 6 ஆயிரம் இருசக்கர வாகனங்களை வாடகை முறையில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னையில் 2 வழித்தடங் களில் இயக்கப்படும் மெட்ரோ ரயில்களில் தினமும் 1 லட்சத் துக்கும் மேற்பட்டோர் பயணம் செய்து வருகின்றனர். மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து அருகில் உள்ள பேருந்து நிலையங்கள், புறநகர் மின்சார ரயில் நிலையம், பறக்கும் ரயில் நிலையங்களோடு இணைக்கும் வகையில் ஷேர் ஆட்டோ, ஷேர் கார் போன்ற இணைப்பு வாகன சேவைகள் இயங்கி வருகின்றன.

இதேபோல் பல்வேறு வழித் தடங்களில் சிறிய பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மெட்ரோ ரயில் பயணிகளை ஊக்குவிக்கவும் அதிகப்படுத்தவும் தொடர்ந்து பல்வேறு வசதிகள் விரிவுப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கிடையே, ப்ளை (Flyy) என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கு செல்ல வாடகைக்கு மின்சார இருசக்கர வாகனங்கள் இயக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

> **அடுத்த ஓர் ஆண்டில் 6,000 இருசக்கர வாகனங்களை மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து வாடகை முறையில் இயக்க திட்டமிட்டுள்ளதாக மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.**

அதன்படி, தற்போது ஆலந்தூர், நந்தனம், கிண்டி, சின்னமலை ஆகிய 4 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து மின்சாரத்தில் இயங்கும் இருசக்கர வாகனங்கள் வாடகைக்கு விடும் முறை நேற்று அறிமுகம் செய்யப்பட்டது.

இந்தச் சேவை தினமும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை வழங்கப்படும். அடுத்த ஓர் ஆண்டில் 6,000 இருசக்கர வாகனங்களை மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து வாடகை முறையில் இயக்க அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தெரி வித்துள்ளது.